Paper ID: IC09

# கெகுணகொல்ல பிரதேசத்தின் பொருளியல் மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்கள்: வரலாற்று மற்றும் சமூகப் பார்வை


**M.F.F. Fasila[1] & M.A.P Ashika[2]**

[1]Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
[2]Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
ffazilamf@gmail.com & pathimaashikama9464@gmail.com



**ஆய்வுச் சுருக்கம்**

ஆங்கிலேயரின் காலத்திலிருந்தே கெகுணகொல்ல பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் வர்த்தக போக்குவரத்துப் பாதையாகவும் காணப்பட்டு வந்தது. அத்துடன் கல்வி, ஆன்மீகம் போன்றவற்றிலும் பிரசித்தி பெற்றதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்பட்டது. கெகுணகொல்ல பிரதேசமானது தொன்மையான வரலாற்றைக் கொண்டதாகவும், முஸ்லிம் சமூகத்திற்கு முக்கியமான ஒர் அடையாளமாகவும், பல பெறுமதியான வளங்களைக் கொண்டுள்ள போதிலும் இது வரை காலமும் எவராலும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத காரணத்தினாலும், எந்த ஒரு முழுமையான ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத காரணத்தினாலும், இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற அவாவில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இந்த தொன்மையான வரலாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் ஏனையோருக்கும் இது பற்றிய அறிவு எட்டப்பட வேண்டும் என்பதும் குருணாகல் மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான ஒரு பிரதேசம் உள்ளது என்பதை வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் என்பதுவுமே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். இந்த ஆய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் தேவை கருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களாக நேர்காணல்கள் மற்றும் அறிக்கைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பனவும், இரண்டாந்தர ஆதாரங்களாக பிரதேசத்தினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள், ஆவணங்கள் சமகாலத்துப் படைப்புக்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது முடிவாக இப்பிரதேசமானது மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக முஸ்லிம்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட பெரும்பான்மை முஸ்லிம்களையும் கொண்ட பிரதேசமாகவும் அனைத்து வளங்களையும் கொண்ட பிரதேசமாகவும் கருதப்படுகிறது.



**திறவுச்சொற்கள்:** கெகுணகொல்ல, முஸ்லிம்கள்.


## அறிமுகம்

இலங்கையின், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய கிழக்கு தேர்தல் தொகுதியில் கெகுணகொல்ல எனும் பிரதேசம் அமைந்துள்ளது. இது குளங்கள், வயல்வெளிகள், ஆறு, மலைக்குன்றுகள் என வளங்களால் சூழப்பட்ட, இடை வலய பிரதேசமாகும்.

நீண்ட நெல் வயல் பரப்புக்களையும், பெருமளவிலான தென்னை பயிர்த்தோட்டங்களையும் கொண்ட இயற்கை கிராமமாகும். சுமார் 36 ஏக்கர்களாக நெல் வயல்கள் நீடிக்கின்றன. மழையை நம்பிய இரு போக நெற்பயிர்ச்செய்கை ஒவ்வொரு வருடமும் இடம்பெறும். மீதமுள்ள பரப்பு தோட்டங்களாகவும் காணப்படுகின்றன.(கிராம சேவகர்)

குறிப்பிட்ட கெகுணகொல்ல பிரதேசத்தில் 1921 கணக்கெடுப்பின் படி 22 குடும்பங்கள், 105 உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன், 1931 பகுதிகளில் 47 குடும்பங்களும், சுமார் 182 அங்கத்தவர்களும் இருந்தனர். ஆனால் தற்போதைய காலப்பகுதியில் சுமார் 200 ற்கும் மேலதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன. இதில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயமாகும். (கிராம சேவகர்)

மேலும் முஸ்லிம்களுக்கே உரித்தான இப்பிரதேசம் சுமார் 300 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த வரலாற்றுத் தொன்மை கொண்ட பிரதேசம் என்பதை ஆய்வுகளின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

இப்பிரதேசத்தின் வரலாறு இதுவரை காலமும் முழுமையாக எவராலும் தொகுக்கப்படாமையும், இலகுவாக இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு ஆவணமும் இல்லாமையும் இவ்வாய்வின் பிரச்சினைகளாகும்.

**ஆய்வு நோக்கம்**

கெகுணகொல்ல பிரதேசமானது தொன்மையான வரலாற்றைக் கொண்டதாகவும் முஸ்லிம் சமூகத்திற்கு முக்கியமான ஓர் அடையாளமாகவும் பல பெறுமதியான வளங்களைக் கொண்டுள்ள போதிலும் இது வரை காலமும் எவராலும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத காரணத்தினாலும், எந்த ஒரு முழுமையான ஆய்வுக்கும் உட்படுத்தப்படாத, காரணத்தினாலும் இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற அவாவில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இந்த தொன்மையான வரலாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் ஏனையோருக்கும் இது பற்றிய அறிவு எட்டப்பட வேண்டும் என்பதும் குருணாகல் மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான ஒரு பிரதேசம் உள்ளது என்பதை வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் என்பதுவுமே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வு முறை**

இவ்வாய்வு இஸ்லாமிய சிந்தனை மற்றும் நாகரீகத்தில் இஸ்லாமிய கல்வி மற்றும் வரலாறு சார் ஆய்வாக அமையப் பெறுவதால் இதில் முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத்தரவுகளாக ஆய்வுப்பிரதேசத்திலுள்ள அனுபவமுள்ள முதியவர்களிடமிருந்து பெறப்பட்ட நேர்காணல்கள் மற்றும் அவர்களது செவி வழிக்கதைகள் என்பனவும் தனியார் கல்வி நிறுவன ஸ்தாபகருடனான நேர்காணல் மற்றும் பாடசாலை அதிபரின் பேட்டி என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், பாடசாலைப் பதிவுத்திரட்டுப் புத்தகம் மற்றும் பள்ளி வாசல் மற்றும் கல்வி நிறுவனங்களின் அறிக்கைப்புத்தகங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் அடைவுகளும்**

**கெகுணகொல்ல பற்றிய ஒரு வரலாற்றுப்பார்வை**

வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம் குளியாப்பிடிய தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழக்கூடிய பிரதேசம் என்று பெயர் போன இடமான விசிநவ (29 முஸ்லிம் கிராமங்கள்) யின் மத்திய தளமாக கெகுணகொல்ல பிரதேசம் காணப்படுகின்றது.

அத்தோடு இலங்கையில் பழைமை வாய்ந்த முஸ்லிம் கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்றது என்பதை இங்கு காணப்படும் வரலாற்றுச்சான்றுகளும், வரலாற்று நூல்களும், ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் இந்தக் கிராமம் பற்றிய வரலாறுகளை எடுத்துக்கூறும் வரலாற்று நூல்கள் குறிப்பாக கிடைக்கப்பெறா விட்டாலும் முதியவர்களினால் கூறப்படும் செவி வழிக்கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள் என்பவற்றைக்கொண்டு இக்கிராமங்களின் வரலாறு பற்றி அறிந்து கொள்ள முடியுமாக உள்ளது.

இலங்கையின் வடமேற்குக் கரையான புத்தளம், கற்பிட்டி ஆகிய துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறவே அரேபிய வர்த்தகர்கள் வர்த்தக நோக்கமாகவும், ஸ்ரீபாத மலையை தரிசிக்கும், நோக்கமாகவும் குருணாகலை ஊடாக செல்லும் தவள முறைப்பாதையில் தமது போக்குவரத்தை அமைத்துக் கொண்டனர். அவர்களது அவ் வர்த்தகப்பாதையானது '**விசிநவ**' எனும் பிரதேசத்தினூடாக ஊடறுத்துச்சென்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு இருந்தமைக்கான தடயங்கள் மற்றும் ஆதாரங்கள் இருந்து வருவதை இக்கிராமத்தில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அத்தோடு அரேபிய வர்த்தகர்கள் கடல் மார்க்கமாக கொண்டு வந்த பொருட்களை உள்நாட்டுக்கு சென்று விற்பனை செய்யவும், அங்கிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பாக்கு மற்றும் இதர பொருட்களை கொண்டு செல்ல போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினால் பொதிகளை சுமந்து செல்லவதற்காக வேண்டி மாடுகளை பயன்படுத்தி வந்துள்ளனர். அதனை அதாவது பொதிகளை சுமந்த மாடுகள் கூட்டம் கூட்டமாக கொண்டு செல்வதை '**தவளம்**' என்று அழைப்பர். இவ்வாறு அரேபிய வர்த்தகர்கள் வடமேற்குக் கரைக்குக் கொண்டு வந்த வர்த்தகப்பொருட்களை மலை நாட்டுக்கு கொண்டு செல்லும் வர்த்தகப்பாதையில் அமைந்துள்ளமையினால் முஸ்லிம்கள் குடிபெயர பிரதான காரணமாக இருக்கலாம் என சான்றுகள் குறிப்பிடுகின்றன. *(நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி 07.05.2006)*

கண்டியை கடைசியாக ஆட்சி செய்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் (கி.பி 1798- கி.பி 1815) ஆட்சியின் போது கி.பி 1802 ல் ஆங்கிலேயருக்குரிய நாட்டிலிருந்து கண்டி நகருக்கு சென்று பாக்கு முதலிய வியாபாரச்சரக்குகளை விலைக்கு கொண்டு திரும்பிய சோனகர் சிலரின் பொருட்களை **'ககுணகலே'** எனுமிடத்தில் பறித்து அவர்களை அடித்து வதைத்து துரத்தி விட்டனர் என வரலாற்றாசிரியர் **திரு . சில்வா** எழுதிய **'இலங்கையின் சரித்திரம்'** எனும் நூலில் 154 ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை சிங்களத்தில் **'விசிநவ புவக் யுத்தய'** எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே வரலாற்றின் அடிப்படையில் நாம் நோக்குகின்ற போது ஆரம்பத்தில் **'ககுணகலே'** என அழைக்கப்பட்டது தான் பிற்பட்ட காலத்தில் **கெகுணகொல்ல** என பெயர் மருவியுள்ளதை அவதானிக்க முடிகிறது. *(நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி 07.05.2006)*

மேலும் தவள முறையில் மாடுகளை ஒன்று சேர்க்கும் **'மடிகே'** இலாகாக்களில் ஒன்றான கெகுணகொல்லவுக்கு அண்மித்ததாக 'மடிகே ஹிந்தகொல்ல' எனும் கிராமம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே போன்று தவள முறையில் சென்ற மாடுகள் ஓய்வு எடுத்த இடம் **'ஹரக்கால'** பெயர் மருவி அரக்கியால எனும் பெயரில் அமைந்துள்ளதும் கெகுணகொல்லவுக்கு அண்மித்ததாக ஒரு கிராமமாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. *(நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி 07.05.2006)*

இந்த சம்பவங்களை வைத்துப் பார்க்கும் போது கெகுணகொல்ல கிராமமானது இலங்கைக்கு ஆங்கிலேயர் வருவதற்கு முன்பிருந்தே முஸ்லிம்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

**கல்வி நிலை**

கெகுணகொல்ல கிராமத்தின் கல்வி வளர்ச்சியினைப் பொருத்தமட்டில் ஆரம்ப காலகட்டத்தில் இங்கு முஸ்லிங்களுக்கென்று ஒரு தனியான அரசாங்கப் பாடசாலை காணப்படவில்லை..

எனவே காலப்போக்கில் தேவை உணரப்பட்டதன் காரணத்தினால் 1918ம் ஆண்டு 'நெத்திபொலகெதர' எனும் கெகுணகொல்லைக்கு அருகாமையில் உள்ள கிராமாத்தில் சிங்களவர்ளும், முஸ்லிம்களும் இணைந்து ஒரு கலவன் பாடசாலை ஒன்றை ஆரம்பித்து அதில் கல்வி கற்று வந்தனர்.

பின்னர் 1919 ம் ஆண்டு '**மர்ஹூம் அப்துல் காதர் மொஹட்டியார்**' என்ற ஊர்ப் பெரியாரின் அயராத முயற்சியினால் கெகுணகொல்ல கிராமத்தில் முஸ்லிம்கெளுக்கென்று ஒரு தனியான பாடசாலையொன்று நிறுவப்பட்டது. இந்தப் பாடசாலையே இந்தப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் மொழி மூல முஸ்லிம் பாடசாலையாகத் திகழ்கிறது. அத்தோடு இப்பாடசாலை இன்று அகில இலங்கை ரீதியில் கிரி/கெகுணகொல்ல தேசிய பாடசாலை என்று மிகவும் பிரசித்தி பெற்று திகழ்கிறது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையை நோக்கும் போது....

குருநாகல் மாவட்டத்தில், கிரியுள்ள எனும் கல்வி வலயத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை 1919 ஆம் ஆண்டு அப்துல் காதர் முகட்டியார் என்பவரின் முயற்சியால் 14 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்டு 'சேமக்கனி மரைக்கார்' என்பவரை ஆசிரியராகக் கொண்டு பாடங்கள் நடை பெற்று வந்தன. 1925 ஆம் ஆண்டு அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் 81 மாணவர்கள் காணப்பட்டனர். 1920 களில் கெகுணகொல்ல பிரதேசத்தைச் சூழ உள்ள கிராமங்களில் இருந்து மாணவர்கள் இங்கு வரத்தொடங்கினர். ஆதன் பின்னர் ஒரு பிரபல்யமான பாடசாலையாக மாறியது. 1962 இல் இவ்வித்தியாலயம் 440 மாணவர்களோடு மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. பின்னர் 1979 இல் மத்திய மகாவித்தியாலயமாகவும் 1994 இல் தேசிய கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 2013 இல் சுப்பிரி பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 1919 இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றை வரை சுமார் 30 அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர்.

இங்கு தரம் 1-13 வரை காணப்படுவதுடன் கலை, வர்த்தகம், உயிரியல், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளும் காணப்படுகின்றன. இதனால் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இங்கு மாணவர்கள் வந்து கல்வி கற்கும் நிலை உருவாகியது.

ஓவ்வொரு வருடமும் இப் பாடசாலையிலிருந்து மருத்துவத்துறை, பொறியியல் துறை, வர்த்தகத்துறை, தொழிநுட்பத்துறை மற்றும் கலைத்துறைகளுக்கு பல்கலைக்கழகம் நுழையும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதை பாடசாலை மதிப்பீட்டு அறிக்கைகள் காட்டுகின்றன.

அத்துடன் 2013 ஆம் ஆண்டு சுபிரி பாடசாலையாக தரமுயர்த்தப்பட்ட பின்னர் இப்பாடசாலையில் இருந்த ஆரம்பப்பிரிவு படிப்படியாக இங்கிருந்து நீக்கப்பட்டது. பின்னர் ஊர்மக்களின் அயராத முயற்சியால் 2015 இல் தனிப்பாடசாலையாக ‘கெகுணகொல்ல ஆரம்பப் பாடசாலை’ என உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது

**தனியார் கல்வி நிறுவனங்கள்**

இங்குள்ள தனியார் கல்வி நிறுவனங்களை எடுத்துகொண்டால் பெரும்பாலும் பாடசாலைக் கல்வியை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இங்கு பிரதானமாக இரண்டு கல்வி நிறுவனங்கள் சேவையாற்றிக்கொண்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அந்த அடிப்படையில் 1993ம் ஆண்டு இப்பிரதேசத்தை சேர்ந்த அல்ஹாஜ் ஏ. எல். அக்ரம் ஆசிரியரின் முயற்சியால் அவரது வீட்டில் க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியடைய தவறிய மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து M.E.Z (Madalassa Educational Zone) என்ற நிறுவனத்தை நிறுவி அதனூடாக ஆங்கிலத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான பின்னேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் பின் 2003ம் ஆண்டு இவர்களின் முயற்சியால் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதே காலப்பகுதியில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையை கருத்திற்கொண்டு தரம் 4 மாணவர்களுக்கான பின்னேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் சமூகத்துக்கு தொழில் நுட்ப அறிவினை வழங்கும் நோக்கோடு கணனி பயிற்சி வகுப்புக்களும் மேலும் சிறார்களுக்கான சிங்கள மொழி வகுப்புக்களை நடத்தும் முயற்சிகளும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2004ம் ஆண்டு எமது சமூகத்தில் காணப்படும் மிகப்பெரிய குறைபாடான வைத்தியர்களின் தேவை, மற்றும் எமது சமூகத்தினர் விஞ்ஞானத்துறையில் ஈடுபாடு காட்டாமையை கருத்திற்கொண்டு ASDA (Athugalpura Science Development Acadamy) எனும் பெயரில் உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கென வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது அகில இலங்கை ரீதியில் பல முஸ்லிம் வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் இன்னும் விஞ்ஞானத்துறை சார் கல்வியலாளர்களையும் உருவாக்கிக்கொண்டு இருக்கின்றது.

ASDA நிறுவனத்தின் வகுப்புக்களை எடுத்து நோக்கினோம் என்றால் இதற்காக O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதற்கு முன்பே அனுமதிக்கப்பட்டு, பாடங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாணவர்களிடையே ஆன்மீகத்தை வளர்க்கும் பொருட்டு தர்பியா பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருவது குறித்திடத்தக்க விடயமாகும்.

மேலும் இக்கல்வி நிறுவனத்துக்கு அகில இலங்கை முழுவதிலுமிருந்து மாணவர்கள் வந்து கற்பதினால் அவர்களுக்கான பாதுகாப்பான சூழலில் விடுதி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு ASDAவில் கற்கும் வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கி வருகின்றது.

அதே போன்று 2013ம் ஆண்டு கல்வி அமைச்சினால் தொழில்நுட்பப்பீடம் அறிமுகப்படுத்தப்பட்டதைத்தொடந்து ASDA விலும் கூட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு தொழில்நுட்பப்பீடத்திலும் மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளை பெற்று வருவது குறித்திடத்தக்க விடயமாகும்.

அத்தோடு ASDA நிறுவனத்தின் பழைய மாணவர் சங்கமானது (**OSA** Old Student of ASDA) இங்கு கற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு கருத்தரங்குகளையும், ஆலோசனை வழிகாட்டல் நிகழ்ச்சிகளையும் தேவைக்கு ஏற்றாற்போல் நடாத்தி வருகிறது.

மேலும் ASDA நிறுவனமானது க.பொ.த(சா/த) மாணவர்களை மையப்படுத்தி 2008ம் ஆண்டிலிருந்து கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களுக்கான இரவு நேர வகுப்புக்களையும் நடாத்தி வருகிறது. இவ்வாறு ASDA நிறுவனம் ஒரு பாரிய கல்விச்சேவையினை கெகுணகொல்ல பிரதேசத்துக்கு வழங்கி வருகின்றது என்பது முக்கியமான விடயமாகும்.

அதே போன்று ஆங்கிலக் கல்வியை கெகுணகொல்ல பிரதேசத்தில் போதிப்பதில் VEEDA (Visinawa Essential Educational Development Acadamy) 1995ம் ஆண்டிலிருந்து துணைபுரிகிறது. இதனூடாக இப்பிரதேசத்தில் உள்ள பலர் ஆங்கில அறிவில் புலமை பெற்றவர்களாகவும் மாற காரணமாய் அமைந்தது.

மேலும் தேவைக்கேற்ப இப் பிரதேசத்தில் உள்ள சமூக நிறுவனங்களும் கல்விமான்களும் கல்விச்சேவையினை வழங்கி வருவது சிறப்பான அம்சமாகும்.

மேலும் இக்கிராமத்தைப் பொறுத்தவரையில் சிறார்களின் கல்வித்தேவையை நிவர்த்தி செய்வதற்காகவும் சில பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. அவையாவன:

- அல் ஹிலால் பாலர் பாடசாலை – கெகுணகொல்ல - 1998 -07 -26
- நூரானியா பாலர் பாடசாலை – தம்பிட்டிய - 1998 -11 -25
- அல் ஹிதாயா பாலர் பாடசாலை – கால்கேம - 1998 -04 -03
- ஸஹ்ரா பாலர் பாடசாலை – நிதுல்லகஹபிட்டிய - 2001 -10 -05
- அல் அமானா பாலர் பாடசாலை – மெடிவெவ - 2015 -11 -30


இவ்வாறான சில பாலர் பாடசாலைகள் ஆரம்ப காலத்திலிருந்தே இக்கிராமத்தில் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். (கிராம சேவகர்)

மேலும் இப்பிரதேச மக்களின் கல்வி அறிவு வீதத்தினை கீழ் வரும் வரைபு:1 விளக்குகின்றது.

1. க.பொ.த (சா/த)
2. க.பொ.த (உ/த)
3. பட்டதாரி

4. டிப்லோமா பயிலுனர்கள்

வரைபு:1




**சமூக சேவை**

பரப்பளவில் சிறிய பிரதேசமாக இருந்தாலும் முஸ்லிம்களுக்கே உரித்தான இக் கெகுணகொல்ல பிரதேசம் அனைத்து வளங்களையும் கொண்டுள்ளது. தேசிய பாடசாலை, பொது நூலகம், தபால் நிலையம், வைத்தியசாலை, கிராமிய அபிவிருத்தி வங்கி என பல வசதிகளையும் அருகருகே கொண்டுள்ளது சிறப்பம்சமாகும்.

கெகுணகொல்ல மத்திய மருந்தகம்' எனும் பெயரில் பெரிய அரசாங்க மருத்துவமனை ஒன்று 1984 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இப்பிரதேசத்தில் சேவையை வழங்கி வருகிறது. மேலும் 1968-10-29 அன்று உப தபால் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பின்னர் தபால் நிலையமாக தரமுயர்த்தப்பட்டு இன்று வரை இயங்கி வருகிறது. அத்துடன் 2001-10-06 அன்று பொது நூல் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பல்துறை சார் நூல்களையும் கொண்டுள்ளதுடன் ஊர் மக்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் பயனளித்துக் கொண்டிருக்கிறது. (கிராம சேவகர்)

**ஆன்மீகப்பணி**

கெகுணகொல்ல பிரதேசத்தின் ஆன்மீகப்பணியானது மிகவும் பழைமை வாய்ந்ததாகக் காணப்படுகிறது என்பது இதனை சற்று அலசிப்பார்ப்பதன் மூலம் தெளிவாகிறது. அதாவது கி.பி.1390 இந்தியாவின் தென்காசியில் இருந்து வருகை தந்த ஏழு சகோதரர்கள் தாம் சென்றடைந்த பிரதேசங்களில் சன்மார்க்க பணிகளை மேற்கொண்டு வாழ்ந்து மறைந்துள்ளதாக வரலாறு கூறுவதோடு அவர் **சைகு சிகாபுத்தீன்** என்றும், அவரது அடக்கஸ்தலம் இன்றும் கெகுணகொல்ல பெரிய பள்ளிவாயிலுக்கு அருகாமையில் அமைந்து இருப்பதும் சிறந்த சான்றாகும். (நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி 07.05.2006)

மேலும் அரக்கியாளையைச் சேர்ந்த களுகல்ல பாண்டியன் எனப்படும் சிங்கள பெருமகனுக்கு இந்த 'துறயலா' பட்டம் கிடைக்கப்பெற்றிருக்கிறது. இந்த பட்டம் கிடைக்கப்பெற்றதுக்கு கெகுணகொல்ல பெரிய பள்ளிவாயிலுக்கு அருகாமையில் அடக்கப்பட்டிருக்கும் 'சைகு சிகாபுத்தீன நாயகம்' உதவி செய்ததாக கர்ண பரம்பரை கதை ஒன்று கூறுகிறது. இதற்கு நேர்ச்சையாக கெகுணகொல்ல பெரிய பள்ளிவாயிலுக்கு 30 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. இது தற்போதும் கூட கெகுணகொல்ல பெரிய பள்ளிவாயிலினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் 1960கள் வரை தென் இந்தியாவிலிருந்து வந்த மார்க்க அறிஞர்கன் பலர் மக்களிடையே மார்க்க பிரச்சாரங்களை இப்பிரதேசத்தில் மேற்கொண்டு வந்துள்ளனர்.

அந்த வகையில் இப்பிரதேசத்தில் முதலாவது அமைந்த பள்ளிவாசலாக கெகுணகொல்ல ஜும்மா பள்ளிவாசல் திகழ்கிறது. மேலும் இது 300 வருடங்களுக்கு மேலான வரலாற்றைக்கொண்டுள்ளது. (நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி 07.05.2006)

மேலும் சனத்தொகை அதிகரிப்பைத் தொடர்ந்து மேலும் சில பள்ளி வாசல்கள் கட்டப்பட்டன. அவைகளில் சில தற்போது ஜும்ஆ பள்ளிவாசல்களாக வளர்ச்சி கண்டுள்ளன.

- மிஸ்பாஹிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் - தம்பிடிய
- ஹிதாயா ஜும்ஆ பள்ளிவாசல் - கால்லேகம
- நிதா பள்ளிவாசல் - கெகுணகொல்ல
- ஹுதா பள்ளிவாசல் - மெடிவெவ
- இப்னு ரவாஹா பள்ளிவாசல் - படதொலவத்த
- ஸஹ்ரா பள்ளிவாசல் - நிதுல்லகஹபிடிய

மேலும் இப்பள்ளிவாசல்கள் வணக்கவழிபாடுகளுக்காக மட்டுமின்றி கல்வி நிலையங்களாகவும் சமூகப்பிரச்சினைகளை ஆராயக்கூடிய மையமாகவும் செயற்பட்டு வருகின்றன.

மாணவர்களின் மார்க்க அறிவு மற்றும் அரபு மொழி விருத்தியினை நோக்காகக் கொண்டு சில அறபு கலாசாலைகள் ஆண், பெண்களுக்கான பகுதி நேர மற்றும் முழு நேரமாக இயங்கி வருகின்றன. அந்த வகையில் கெகுணகொல்ல அந் நஹ்ஜதுல் இர்பானியா அரபுக் கல்லூரி, தம்பிட்டிய மிஸ்பாஹிய்யா அரபுக் கல்லூரி, கால்லேகம அல் ஹிதாயா அரபுக் கல்லூரி மற்றும் அரக்கியால அல் இலாஹிய்யா அரபுக் கல்லூரி என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

**முடிவுரை**

இலங்கையின், குருணாகல் மாவட்டத்தில் முஸ்லிம்களின் தொன்மையான வரலாற்றையும் பொருளியல் மற்றும் பண்பாட்டு துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றங்களையும் கொண்ட பிரதேசமாக கெகுணகொல்ல பிரதேசம் காணப்படுகின்றது என்பது இவ்வாய்வுக்காக பெறப்பட்ட தகவல்கள் மூலம் நிரூபிக்கப்படுகின்றன.

எனவே இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்வதினூடாக இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம், கலாச்சாரங்களைப் பாதுகாக்க முடிவதோடு, சிறந்த முன்னுதாரணங்களை இளம் சமுதாயத்தினருக்கு எத்தி வைக்க முடிகின்றது.

**உசாத்துணைகள்**

- கிராம உத்தியோகத்தரின் பதிவுகள் - கிராம நிலதாரி –கெகுணகொல்ல 1115 (13-05-2017)
- முதியவர்களின் செவிலிக்கதைகள் - ஏ.பீ.அஸனாலெப்பே (கெகுணகொல்ல)(13-05-2017)
- நேர்காணல்கள்
    - அல்ஹாஜ் ஏ.பீ. அஸனாலெப்பே –கெகுணகொல்ல (13-05-2017)
    - அல்ஹாஜ் ஏ.ஸீ.எம். சுலைமாலெப்பே –மடலஸ்ஸ (14-05-2017)
- கல்வி சார் நேர்காணல்கள்
    - ஜனாபா. எஸ்.எம்.சைத்தூன் பீவி ஆசிரியை (14-05-2017)
    - ஜனாப். ஏ.எல். அப்துஸ்ஸலாம் ஆசிரியர் (15-05-2017)
- குரல் பதிவு

  முன்னால் அதிபர் அல்-ஹாஜ் ஏ.எச்.எம்.ஸமீம் ( http://youtube/X8Mxwkma4qk )
- பள்ளி வாயில் மற்றும் நிறுவனங்களின் அறிக்கை புத்தகங்கள்
- நினைவு மலர் - இர்பானிய்யா அரபுக்கல்லூரி கெகுணகொல்ல 07.05.2006
- நினைவு மலர் - FEED (Forum for Education and Economic Development) 09-03-2008